©
GOVERNMENT OF TAMIL NADU
2010

[Regd. No. TN/CCN/467/2009-11.
[R. Dis. No. 197/2009.
[Price: Re. 0.80 Paise.

# TAMIL NADU GOVERNMENT GAZETTE

EXTRAORDINARY PUBLISHED BY AUTHORITY

No. 390] CHENNAI, MONDAY, DECEMBER 27, 2010
Margazhi 12, Thiruvalluvar Aandu–2041

## Part VI—Section 2

**Notifications or Orders of interest to a section of the public issued by Heads of Departments, etc.**

### NOTIFICATIONS BY HEADS OF DEPARTMENTS, ETC.

#### COLLECTORS AND LOCAL AUTHORITIES

**ஊராட்சிகளின் ஆய்வாளர் மற்றும் மாவட்ட ஆட்சித்தலைவர், விழுப்புரம்.**

**விழுப்புரம் மாவட்டம், மரக்காணம் ஊராட்சி ஒன்றியம், கந்தாடு ஊராட்சி மன்றத் தலைவர் பதவி நீக்கம் செய்தல் பற்றிய அறிவிக்கை.**

*[ந.க.எண் அ3/6769/2007/உ.இ.(ஊ).]*

**No. VI(2)/577(c-1)/2010.**

தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டம் 1994 பிரிவு 205, உட்பிரிவு 11–ல் ஊராட்சிகளின் ஆய்வாளர் மற்றும் மாவட்ட ஆட்சித் தலைவருக்கு அளிக்கப்பட்டுள்ள அதிகாரத்தின்படி, மரக்காணம் ஊராட்சி ஒன்றியம், கந்தாடு ஊராட்சி மன்றத் தலைவர் ஊராட்சி நிதியிலிருந்து, விதி முறைகளுக்கு புறம்பாக தொகை ரூ. 7,93,774/–ஐ எடுத்தமைக்காகவும், ஊராட்சிக் கூட்டங்கள் நடத்தாமைக்காகவும் கந்தாடு ஊராட்சி மன்றத் தலைவர் திருமதி தேவி பரசுராமன் என்பவரை கந்தாடு ஊராட்சி மன்றத் தலைவர் பதவியிலிருந்து பதவி நீக்கம் செய்து அறிவிக்கை வெளியிடப்படுகிறது.

இந்த அறிவிக்கை ***தமிழ்நாடு அரசிதழில்*** வெளியிடப்படும் நாள் முதல் அமலுக்கு வருகிறது.

**விழுப்புரம் மாவட்டம், உளுந்தூர்பேட்டை ஊராட்சி ஒன்றியம், பாலி ஊராட்சி மன்றத் தலைவர் பதவி நீக்கம் செய்தல் பற்றிய அறிவிக்கை.**

*[ந.க.எண் அ3/1129/2010/உ.இ.(ஊ).]*

**No. VI(2)/577(c-2)/2010.**

தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டம் 1994 பிரிவு 205, உட்பிரிவு 11–ல் ஊராட்சிகளின் ஆய்வாளர் மற்றும் மாவட்ட ஆட்சித் தலைவருக்கு அளிக்கப்பட்டுள்ள அதிகாரத்தின்படி, உளுந்தூர்பேட்டை ஊராட்சி ஒன்றியம், பாலி ஊராட்சி மன்றத் தலைவர் மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதி திட்டத்தில் வேலைக்கு வராதவர்களை வேலைக்கு வந்ததாகவும், ஊரில் இல்லாமல் வெளி ஊரில் வசிப்பவர்கள் பெயர்களை

வருகை பட்டியலில் முறைகேடாக சேர்த்தும், ஊரில் இல்லாத நபர்களுக்கு வேலை வழங்கியதாக போலியாக பதிவுகள் மேற்கொண்டும், நிதி முறைகேடு செய்தமைக்காக பாலி ஊராட்சி மன்றத் தலைவர் திருமதி கு. பழனியம்மாள் என்பவரை ஊராட்சி மன்றத் தலைவர் பதவியிலிருந்து பதவி நீக்கம் செய்து அறிவிக்கை வெளியிடப்படுகிறது.

இந்த அறிவிக்கை ***தமிழ்நாடு அரசிதழில்*** வெளியிடப்படும் நாள் முதல் அமலுக்கு வருகிறது.

விழுப்புரம்,
2010, டிசம்பர் 24.

**இரா. பழனிசாமி,**
*ஊராட்சிகளின் ஆய்வாளர் மற்றும்*
*மாவட்ட ஆட்சித்தலைவர்.*

## விழுப்புரம் மாவட்டம், வல்லம் ஊராட்சி ஒன்றியம், மேல்ஒலக்கூர் ஊராட்சி மன்றத் தலைவர் பதவி நீக்கம் செய்தல் பற்றிய அறிவிக்கை

*[ந.க.எண் அ3/1111/10/உ.இ.(ஊ).]*

**No. VI(2)/577(c-3)/2010.**

தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டம் 1994 பிரிவு 205, உட்பிரிவு 11–ல் ஊராட்சிகளின் ஆய்வாளர்/மாவட்ட ஆட்சித் தலைவருக்கு அளிக்கப்பட்டுள்ள அதிகாரத்தின்படி, மேல்ஒலக்கூர் ஊராட்சி மன்றத் தலைவர் மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதி திட்டத்தில் வேலைக்கே வராதவர்கள் வேலைக்கு வந்ததாகவும், ஊரில் இல்லாமல் வெளி ஊரில் வசிப்பவர்கள் பெயர்களை வருகை பட்டியலில் முறைகேடாக சேர்த்தும், ஊரில் இல்லாத குடும்பங்களுக்கு வேலை வழங்கப்பட்டுள்ளதாக போலியாக பதிவுகள் மேற்கொண்டு நிதி முறைகேடு செய்தும், அரசு ஊழியர் மற்றும் முழுநேரமும் வேறு தொழில் செய்பவர்களை இத்திட்டத்தில் பணி செய்ததாக, போலியாக அவர்களின் பெயர்களை தினக்கூலி வருகைப் பட்டியலில் சேர்த்து திட்டநிதியினை முறைகேடு செய்ததற்காக மேல் ஒலக்கூர் ஊராட்சி மன்றத் தலைவர் திருமதி கோ. அமுதா என்பவரை பதவி நீக்கம் செய்து அறிவிக்கை வெளியிடப்படுகிறது.

இந்த அறிவிக்கை ***தமிழ்நாடு அரசிதழில்*** வெளியிடப்படும் நாள் முதல் அமலுக்கு வருகிறது.

விழுப்புரம்,
2010, டிசம்பர் 23.

**இரா. பழனிசாமி,**
*ஊராட்சிகளின் ஆய்வாளர் மற்றும்*
*மாவட்ட ஆட்சித்தலைவர்.*

தமிழ்நாடு அரசுக்காக சென்னை எழுதுபொருள் மற்றும் அச்சுத் துறை இயக்குநரால்
அச்சிடப்பட்டு வெளியிடப்பட்டது.